**செய்தி வெளியீடு எண்: 417** **நாள்: 29.06.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.6.2018) சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு காவல்துறையின் மாபெரும் ரத்ததான முகாமை துவக்கி வைத்தார்கள்.

ரத்தம் உயிரின் நாடி என்பதால், ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இன்று தமிழ்நாடு காவல்துறையினர் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ரத்ததான முகாம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், 89 இடங்களில் நடைபெறும். இதில் தமிழ்நாடு முழுவதும் 20,000–க்கும் மேற்பட்ட காவல் ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு ரத்ததானம் செய்வார்கள். இந்த மாபெரும் ரத்ததான முகாமில் கலந்து கொண்டு ரத்ததானம் செய்பவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

புதுடில்லியில் 26.6.2018 அன்று நடைபெற்ற ''பாஸ்போர்ட் சேவா திவஸ்'' விழாவில், பாஸ்போர்ட் விண்ணப்பங்களை உடனுக்குடன் சரிபார்க்கும் வகையில் m-Police App செயலியை உருவாக்கிய தமிழ்நாடு காவல்துறையின் பணியை பாராட்டி அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு காவல்துறைக்கு மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட சான்றிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று காவல்துறை கூடுதல் இயக்குநர் (தொழில்நுட்பம்) திரு.எம்.என்.மஞ்சுநாதா, இ.கா.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.விஜயகுமார், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஏ.கே.விசுவநாதன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (பயிற்சி) திரு.ஆர்.சி. குடவாலா, இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) திரு.முகமது ஷகில் அக்தர், இ.கா.ப., மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 29.6.2018**